## தமிழ்நாட்டு விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை !

# சாதனைகள் தொடர, கழக அரசு துணை நிற்கும்! முட்டுக்கட்டைகளைக் கடந்து முன்னேறுங்கள்!

## 589 வீரர்களுக்கு 14 கோடி ரூபாய் வழங்கி – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, ஆக.1-

**சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில், நேற்று முன்தினம் (30.7.2024) நடைபெற்ற விழாவில் சர்வதேச - தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் பதக்கங்களை வென்ற 589 தமிழ்நாட்டு வீரர்கள் - வீராங்கனையருக்கு, ரூ.14 கோடி அளவுக்கு உயரிய ஊக்கத் தொகையை இளைஞர் நலன் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி, நம் வீரர்களை வாழ்த்தி ஊக்க உரையாற்றினார்.**

**அப்போது, `உங்களுடைய சாதனைகள் தொடர, கழக அரசு என்றும் துணை நிற்கும்' என்றும் தெரிவித்தார்.**

**இளைஞர் நலன் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு பல்வேறு சாதனைகளைப் படைத்திருக்கக்கூடிய நம் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குகின்ற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில், நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில் விளையாட்டுத்துறையில் சாதனை படைத்து வரும் நம் தமிழ்நாட்டு வீரர்களை எப்பொழுதும் பாராட்டி ஊக்கப்படுத்தி வருகின்றது. அந்த வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்படி பல்வேறு சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வென்ற 589 வீரர்களுக்கு சுமார் 14 கோடி ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்கத்தொகை இங்கு வழங்க இருக்கின்றோம்.

### வாழ்த்து– பாராட்டு!

இந்தத் திட்டத்தில் பயன்பெறக்கூடிய நீங்கள் அனைவரும் நம் முதலமைச்சரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். முதலமைச்சருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றியையும் அரசின் சார்பாகவும், துறையின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு வந்துள்ள உங்களில் பல பேர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதியைச் சேர்ந்தவர்கள் என்பது, எங்களுக்குக் கூடுதல் பெருமை, மகிழ்ச்சி.

### ஒலிம்பிக் போட்டி

இப்பொழுது, ஒட்டுமொத்த உலகமும் விளையாட்டைப் பற்றி பேசிக்கொண்டிருக்கக்கூடிய ஒலிம்பிக் போட்டிகள், பாரிஸில் இரண்டு நாட்களுக்கு முன்பு துவங்கி இருக்கின்றது. இதில், நம் இந்தியாவின் சார்பாக மொத்தம் 117 வீரர்கள் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் களம் காண்கிறார்கள். பஞ்சாப், ஹரியானாவிற்கு அடுத்து அதிக விளையாட்டு வீரர்களை அனுப்பி வைக்கும் மாநிலமாக நம் தமிழ்நாடு அமைந்திருப்பது, நமக்கெல்லாம் மிகப்பெரிய பெருமை, மகிழ்ச்சியான செய்தி. நமது மாநிலத்திலிருந்து மட்டும் 7 வீராங்கனையர், 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 16 பேர் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

### ஊக்கத்தொகை

இந்த 16 வீரர்களுக்கும் நம் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தலா ரூபாய் 7 இலட்சம் வீதம் ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கி, நம் முதலமைச்சர் அவர்கள் வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்தி, வழி அனுப்பி வைத்தார்கள். இந்த மாநிலத்தில், முதலமைச்சராக மட்டுமல்ல, உங்கள் ஒவ்வொருவரையும் தனது சொந்தப் பிள்ளையாக, குடும்பமாக நினைத்துத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் இந்த ஊக்கத்தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். நானும் உங்களின் கூடப் பிறந்த சகோதரனாக, அண்ணனாக இந்த ஊக்கத்தொகையை வழங்க வந்திருக்கின்றேன்.



பாரீஸ்-2024 ஒலிம்பிக்சில் இந்தியாவைச் சேர்ந்த மனுபாக்கர் எனும் வீராங்கனை துப்பாக்கி சுடும் போட்டியில், வெண்கலப் பதக்கத்தை வென்று, இந்தியாவின் பதக்கப் பட்டியலை நேற்று தொடங்கி வைத்திருக்கின்றார். இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவும் அவரை வாழ்த்திக் கொண்டிருக்கிறது.

### சிந்திய கண்ணீர்

கடந்த 2020-ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின்போது, தனது துப்பாக்கியில் ஏற்பட்ட பழுது காரணமாக, பதக்கத்தைத் தவற விட்ட மனுபாக்கர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக கடினமாக முயற்சி எடுத்து, இன்றைக்கு இந்தியாவிற்கு பதக்கத்தை வென்று கொடுத்திருக்கிறார்.

கடந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின்போது சிந்திய கண்ணீரை தனது விடாமுயற்சியின் மூலமாக மூன்று ஆண்டுகளில் வெற்றிமலராக மாற்றியிருக்கிறார் மனுபாக்கர். உங்களைச் சுற்றி இருப்பவர்கள் எத்தனை முட்டுக்கட்டைகளைப் போட்டாலும் எவ்வளவு இகழ்ச்சியான வார்த்தைகளைக் கூறினாலும் உங்கள் இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கவேண்டும். அவரைப் போலவே, ஒலிம்பிக் பதக்கம் வெல்லவேண்டும் என்ற இலட்சியத்தோடு இங்கு அமர்ந்திருக்கின்ற வீரர், வீராங்கனைகளை நான் பார்க்கின்றேன்.

### பதக்கப் பட்டியல்

இந்தியாவின் பதக்கப் பட்டியலில் உங்களின் பெயர்களும் ஒரு நாள் வரும் என்று அரசுக்கும், எனக்கும் நம்பிக்கை இருக்கின்றது. இதற்கு, தமிழ்நாடு அரசும், நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறையும் உங்களுக்கு என்றென்றும் உற்றத் துணையாக இருக்கும். குறிப்பாக, இங்கு வீராங்கனைகள் அதிக எண்ணிக்கையில் வந்திருப்பது கூடுதல் மகிழ்ச்சி.

பல்வேறு சமூகத் தடைகளையெல்லாம் தாண்டித்தான் நீங்கள் இந்த இடத்திற்கு வந்திருப்பீர்கள் என்று எங்களுக்கு தெரியும். `பெண் பிள்ளைகளுக்கு எதற்கு விளையாட்டு' என்று, இன்று கேட்கின்ற இவர்கள்தான், ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்பு `அடுப்பு ஊதும் பெண்ணிற்கு படிப்பு எதற்கு? என்றும் கேட்டார்கள். ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு "பெண் பிள்ளைக்கு வீட்டுப் படிக்கட்டைத் தாண்டி என்ன வேலை?" என்றும் கேட்டார்கள்.

### கால்பந்து அணி

அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பயப்படாத பெண்கள்தான், சமுதாயத்தை இந்த அளவிற்கு நீங்கள் முன்னேற்றி இருக்கிறீர்கள். அந்த வரிசையில், நீங்களும் நாளை இடம் பிடிக்கவேண்டும் என்ற எண்ணம், உங்களுக்கு ஏற்பட வேண்டும். இந்த மேடையில் உட்கார்ந்து இருக்கக்கூடிய கால் பந்தாட்ட வீராங்கனை இந்துமதி, வாழ்க்கையில் பல்வேறு இன்னல்களைக் கடந்து, இந்திய மகளிர் கால்பந்து அணியின் கேப்டனாக உயர்ந்தார். அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் சார்பில், இந்தியாவின் சிறந்த கால்பந்து வீராங்கனை என்ற விருதையும் பெற்றுள்ளார். அவருக்கு என் சார்பாகவும், உங்களின் சார்பாகவும் வாழ்த்துகளை நாம் தெரிவித்துக் கொள்வோம். அதேபோல், இந்துமதி, சகோதரி பவானி தேவி போன்றவர்களைத்தான் நாம் அனைவரும் எடுத்துக்காட்டாக, ரோல் மாடலாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு உங்களுக்கெல்லாம் உயரிய ஊக்கத்தொகையை இந்த அரசு கொடுத்திருக்கிறது. இது எந்தளவிற்கு உங்களுக்கு உதவிகரமாக இருக்கப் போகிறதோ, அதே அளவுக்கு விளையாட்டுத் துறையில் சாதிக்கத் துடிக்கும் வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் ஒன்றாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இதுமட்டுமல்லாமல், எலைட் ஸ்போர்ட்ஸ் பெர்சன்ஸ் ஸ்கீம், மிஷன் இன்டர்நேஷனல் மெடல் ஸ்கீம், சாம்பியன்ஸ் டெவலப்மென்ட் ஸ்கீம் போன்றவற்றின் மூலமாகவும் நம் அரசு விளையாட்டு வீரர்களுக்கு என்றென்றும் துணை நிற்கின்றது. சிறப்பாக விளையாடுகின்ற விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக, துவங்கப்பட்டதுதான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன்.

### நிதியுதவி

கிட்டத்தட்ட, ஓராண்டுக்கும் மேலாக நூற்றுக்கும் அதிகமான வீரர், வீராங்கனையர்களுக்கு 9 கோடி ரூபாய் அளவிற்கு அறக்கட்டளை மூலம் நிதியுதவிகளை வழங்கி, ஊக்கப்படுத்தி வருகின்றது, நம் திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் நிதியுதவி பெற விரும்பும் விளையாட்டு வீரர்கள் www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

உங்களின் நண்பர்கள் வட்டாரத்திலும் இருக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கும் இதனை நீங்கள் எடுத்துச் செல்லுங்கள். தமிழ்நாடு அரசின் இந்த முன்னெடுப்புகளால் நம் வீரர்கள் பல்வேறு சாதனைகளைப் படைத்து, வெற்றியைத் தேடித் தருகிறார்கள். சில மாதங்களுக்கு முன்பு, நடைபெற்ற `கேலோ இந்தியா' இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் நம் தமிழ்நாடு மாநிலம் முதன்முறையாக பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்தது. இந்த வகையில், தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையில் எடுத்து வரும் முயற்சிகளைப் பாராட்டி, பல்வேறு திசைகளில் இருந்து நம் மாநிலத்திற்குப் பாராட்டுகளும், விருதுகளும் குவிந்து வருகின்றன. குறிப்பாக, `தி இந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' சார்பாக, `தி பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்' எனும் விருது, `சி.ஐ.ஐ ஸ்போர்ட்ஸ் பிசினஸ் அவார்ட்' நிகழ்வில் `தி பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்' போன்ற விருதுகள் நம் தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டன.

### நீங்கள்தான் காரணம்

இந்த விருதுகளும், அங்கீகாரங்களும் தமிழ்நாட்டிற்கு கிடைக்கிறது என்றால், அதற்கு காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களாகிய நீங்கள் தான் ஒரே காரணம். உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்த விருதுகள்தான் அவை, என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

உங்களின் வெற்றிப்பயணம் தொடர்ந்திட, தமிழ்நாடு அரசு எல்லா வகையிலும் துணை நிற்கும். அரசு மற்றும் அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள விளையாட்டு-வேலைவாய்ப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று உங்களைப் போன்ற வீரர்கள் பல ஆண்டுகளாக, பல கோரிக்கைகளை வைத்து வருகின்றார்கள்.

கழக அரசு அமைந்த பிறகு, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணத்தால், முதற்கட்டமாக 100 வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பினை வழங்க இருக்கிறோம் என்று சட்டசபையிலேயே அதைப் பதிவு செய்தேன். அதில் முதற்கட்டமாக குறிப்பாககூடிய விரைவில், 50 வீரர்களுக்கான பணி நியமன ஆணைகளை நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கைகளால் வழங்க இருக்கிறார் என்பதை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### ரூ.90 கோடியே 24 லட்சம்

எனவே, உங்களின் கோரிக்கைகளை, தேவைகளை அரசிற்கு தெரியப்படுத்துங்கள். அவற்றை நிறைவேற்ற, தமிழ்நாடு அரசும், நம்முடைய துறையும் எப்பொழுதும் தயாராக இருக்கின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்தது முதல் இதுவரை 2 ஆயிரத்து 756 வீரர்களுக்கு 90 கோடியே 24 லட்சம் ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். வரும்காலங்களிலும் இது தொடரும். நாம் எல்லோரும் இணைந்து தமிழ்நாட்டை இந்திய விளையாட்டுத் துறையின் தலைநகராக மாற்றுவோம். உயரிய ஊக்கத்தொகையைப் பெற வந்துள்ள அத்தனை வீரர், வீராங்கனைகளுக்கும் என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முனைவர். அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் மணிகண்டன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பொது மேலாளர் திருமதி. மெர்சி ரெஜினா, இந்திய கால்பந்து அணியின் தலைசிறந்த வீராங்கனைகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்துமதி, பவானிதேவி மற்றும் ஏராளமான விளையாட்டு வீரர்கள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.07.2024) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 589 வீரர் –வீராங்கனைகளுக்கு ரூ. 13.98 கோடி மதிப்பில் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, கால்பந்து வீராங்கனை இந்துமதி, வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

> **இந்தியாவின் பதக்கப் பட்டியலில் உங்களின் பெயர்களும் ஒரு நாள் வரும் என்று அரசுக்கும், எனக்கும் நம்பிக்கை இருக்கின்றது. இதற்கு, தமிழ்நாடு அரசும், நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறையும் உங்களுக்கு என்றென்றும் உற்றத் துணையாக இருக்கும். குறிப்பாக, இங்கு வீராங்கனைகள் அதிக எண்ணிக்கையில் வந்திருப்பது கூடுதல் மகிழ்ச்சி.**